**அ.வ.எண். 255/2023**

**நாள் – 04.02.2025.**

**வாதி – செல்வராஜ் த/பெ – பொன்னுசாமி**

**கட்டளை 10 ன் கீழ் பதிவு செய்யும் வாதியின் விசாரணை வாக்குமூலம்**

1. நானும், 1ம் பிரதிவாதி ராஜேந்திரனும் உடன் பிறந்த சகோதரர்கள்.

2. சொத்துகள் ஆதியில் என் தகப்பனார் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டது என்பதில் எந்த முரண்பாடும் இல்லை.

3. என் அப்பா எனக்கு 2 சென்ட் இடம் எழுதிக் கொடுத்தார்.

4. தென்வடல் மற்றும் கிழமேல் அளவுகள் சரியாகத் தெரியவில்லை.

5. பழைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்டும் போது பத்திரப்படி அளக்காமல் வீடு கட்டினேன்.

6. பழைய கட்டித்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டும்போது தென்பக்கம் 1.1/2 அடி அளவு இடம் விட்டு வீடு கட்டினேன்.

7. பிரதிவாதிக்கு எவ்வளவு சென்ட் இடம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

8. பத்திரப்படி எனக்கு என் இடத்தை அளந்து கொடுத்துவிட்டால் சமாதானமாக செல்ல விருப்பமாக உள்ளேன்.

9. பத்திரத்தில் உள்ள அளவுகளின் படி எனக்கு இடத்தை அளந்து கொடுத்துவிட்டால் பிரதிவாதி மீது கொடுத்த வழக்கில் நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

10. நீதிமன்ற ஆணையர் என் பத்திரப்படி என் இடத்தை அளக்கும் போது 2ம் தபசில் சொத்து பிரதிவாதியின் வசம் வந்தால் நான் பிரதிவாதிக்கு அதை விட்டுக்கொடுக்க தயாராக உள்ளேன்.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி